# ழகரம்

## ஆடி மாத சிறப்பிதழ்



குரோதி வருடம்
ஆடி ,2024

# பொருளடக்கம்


03 புத்தக மரபு

04 கல்கண்டு பொங்கல்

06 மனிதன் மறந்தவை

07 கொஞ்சம் கதை

09 புதிர் விளையாட்டு

10 எப்போது? ஏன்?

12 கவித் தொகுப்பு

13 தமிழ் களஞ்சியம்

# சின்னஞ்சிறு பழக்கங்கள்





**பக்கங்கள்: 352**

நீங்கள் உங்கள் வாழ்க்கையை மாற்ற விரும்பினால் நீங்கள் பிரமாண்டமாக சிந்திக்க வேண்டும் என்று மக்கள் நினைக்கின்றனர். ஆனால் பழக்கங்களைப் பற்றி விரிவாக ஆய்வு செய்து அதில் உலகப் புகழ்பெற்ற நிபுணர்களில் ஒருவராகத் திகழ்கின்ற ஜேம்ஸ் கிளியர் அதற்கு வேறொரு வழியைக் கண்டுபிடித்துள்ளார்.

தினமும் காலையில் ஐந்து நிமிடங்கள் முன்னதாகவே எழுந்திருத்தல், ஒரு பதினைந்து நிமிடங்கள் மெதுவோட்டத்தில் ஈடுபடுதல், கூடுதலாக ஒரு பக்கம் படித்தல் போன்ற நூற்றுக்கணக்கான சிறிய தீர்மானங்களின் கூட்டு விளைவிலிருந்துதான் உண்மையான மாற்றம் வருகிறது என்று அவர் கூறுகிறார். இந்தக் கடுகளவு மாற்றங்கள் எப்படி உங்கள் வாழ்க்கையைப் பெரிதும் மாற்றக்கூடிய விளைவுகளாக உருவெடுக்கின்றன என்பதை ஜேம்ஸ் இப்புத்தகத்தில் தெளிவாக வெளிப்படுத்துகிறார்.

எல்லா பெரிய விஷயங்களும் சிறிய தொடக்கத்தில் இருந்து வருகின்றன. ஒவ்வொரு பழக்கத்திற்கும் விதை ஒரு ஒற்றை, சிறிய முடிவு. ஆனால் அந்த முடிவு மீண்டும் மீண்டும் செய்யப்படுவதால், ஒரு பழக்கம் முளைத்து வலுவடைகிறது. வேர்கள் தங்களைத் தாங்களே நிலைநிறுத்திக் கொண்டு கிளைகள் வளரும்.

— ஜேம்ஸ் கிளியர்



# கல்கண்டு பொங்கல்



## தேவையான பொருட்கள் :

1. பச்சரிசி..................250 கிராம்(1 குவளை)
2. கல்கண்டு............400 கிராம் (2 குவளை)
3. பால்..........................1/2 லிட்டர்
4. நெய்..........................50 மில்லி லிட்டர்
5. ஏலக்காய்.................5
6. முந்திரி பருப்பு........12
7. தண்ணீர்...................1/2 லிட்டர்





1. பச்சரிசியை அரை மணி நேரம் ஊற வைக்கவும். பின் சமையல் பாத்திரத்தில் பச்சரிசியை சேர்த்து 2 குவளை பாலும் 2 குவளை தண்ணீரும் சேர்த்து வேக வைக்கவும். அரிசி நன்றாகக் குழையும் வரை வேக வைக்கவும்.

2. ஐந்து நிமிடங்களுக்கு பிறகு பாத்திரத்தை  திறந்து சாதத்தை நன்றாக மசித்து கொள்ளவும்.

3.கற்கண்டை 1/4 குவளை தண்ணீர் சேர்த்து உருக்கி கொள்ளவும்.இதை வேக வைத்த பச்சரிசியுடன் சேர்த்து கலந்து கொள்ளவும்.பின் நெய் சேர்த்து கலந்து கொள்ளவும். ஏலக்காய் பொடி செய்து சேர்த்து கலந்து கொள்ளவும். முந்திரி பருப்பை நெய்யில் வறுத்து எடுத்து சேர்க்கவும்..

4. பின் குறிப்பு : 1 குவளை அரிசிக்கு 2 குவளை பால் + 2 குவளை தண்ணீர் (1: 4 ரேஸியோ). 1 குவளை அரிசிக்கு 2 குவளை கல்கண்டு(1:2 ரேஸியோ) என்பது சரியான அளவு. அவரவர் சுவைக்கேற்ப மாற்றிக் செய்து கொள்ளலாம்.



## சுவையான கல்கண்டு பொங்கல் தயார்!!

# மனிதன் மறந்தவை



1. இரு கை கூப்பி வணக்கம் சொல்லியது.
2. வீட்டிற்குள் நுழையும் முன் கை கால் கழுவி பிறகுநுழைந்தது.
3. மஞ்சள் நீராடி விளையாடியது.
4. உணவில் மஞ்சள் சேர்த்தது.
5. சாம்பல் உப்பு கொண்டு பல் துலக்கியது.
6. மாட்டுச் சாணம் தெளித்து வாசல் பெருக்கியது, வீட்டின் தரையை மொழுகியது, பிள்ளையார் வைத்தது
7. வருடம் ஒரு முறை வீட்டிற்கு வெள்ளை அடித்தது.
8. மாலை நேரம் வீட்டில் சாம்பிராணி ஏற்றி புகை போட்டது.
9. பெரிய காரியம் மற்றும் நெரிசல் மிக்க இடங்களில் இருந்து திரும்பியதும் உடைகளை கழற்றி வீட்டிற்கு வெளியே வைத்தது.
10. பின்வாசல் வழியாக சென்று குளித்துவிட்டு வீட்டில் நுழைந்தது
11. நாங்கள் மறந்த மரபுகள் எல்லாம் ஏதோ ஒருவகையில் நோய்த்தடுப்பு முறைகளாக இருந்திருக்கின்றன.

# கொஞ்சம் கதை!!



முன்னொரு காலத்தில் குரங்கு ஒன்று இருந்தது. அதற்கு செர்ரிப் பழங்கள் என்றால் உயிர். ஒரு நாள் அது, அழகான செர்ரிப் பழத்தைக் கண்டது. உடனே மரத்திலிருந்து இறங்கிப் பார்த்தால், அது ஒரு சிறிய கண்ணாடிக் மண் குவளைக்குள் இருந்தது. உடனே குரங்கு அந்தக் மண் குவளைக்குள் கையை விட்டது... பழத்தை இறுகப்பற்றிக் கொண்டது... பிறகு அந்தப் பழத்தை குவளையிலிருந்து வெளியே எடுக்க முயற்சிக்கிறது. ஆனால், கை எடுக்க முடியவில்லை. உள்ளே போகும்போது...நேராகப் போனக் கை, பழத்தைப் பற்றிக் கொண்டதும் வடிவம் பெரியதாகவே...வெளியில் வரவில்லை... இது ஒரு பொறி...! குரங்கைப்பிடிக்க வேடன் வைத்தப் பொறி... குரங்கு எப்படிச் சிந்திக்கும் என்பதை அறிந்த வேடனவன். குரங்கு போராடுவதைக் கண்ட உடன் அங்கே



வந்தான்,குரங்கு ஓடப் பார்த்தது. கை குவளையில் சிக்கிக் கொண்டதால், வேகமாக ஓடித் தப்பிக்கவும் முடியவில்லை. இருப்பினும் பழம் தன் கைப்பிடிக்குள் தான் இருக்கிறது என்ற ஆறுதல் அதற்கு. வேடன் குரங்கைத் தாவிப் பிடித்தான்,அதன் கையின் மேல் சட்டென ஒரு தட்டுத் தட்டினான்... அதிர்ச்சியில் அது பழத்தை விட்டு விட்டது. கை வெளியில் வந்து விட்டது என்றாலும் அதுவேடன் பிடியில் சிக்கியிருந்தது.வேடனிடம், கண்ணாடிக் குவளையும், பழமும் சேதமாகாமல் அப்படியே இருந்தன. குரங்கின் சிந்தனை,மனவழிச் சிந்தனை.கடைசியில் வரும் மரணமே வேடன்..."நாம் வேண்டாத ஆசையில், கையை நுழைத்து... அகப்பட்டு விடுகிறோம்... நம்சொந்த குவளையில்...வேடன் வரும் முன்... கையை உருவிக் கொள்......

# கண்டுபிடி கண்டுபிடி!!

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இ | க | ரா | வூ | ச | றி | ன் | ப |
| கு | உ | ர | ல் | ழ் | ஞ | ங் | சி |
| ஊ | ரு | ட் | டி | கு | ரு | வி | ல |
| ஒ | ட் | ட | க | ம் | எ | ஜ | ந் |
| தை | த் | று | சி | டி | று | ம் | தி |
| கே | யெ | தி | ம | ன் | லை | ட் | ட |
| து | பு | ம் | று | எ | ணா | க | ந |
| லி | டை | ந | ரி | ம் | லி | ஓ | த |

# எப்போது? ஏன்?

மூன்றாம் தமிழ் சங்கம் என்பது கபாடபுரம் கடலால் அழிந்த பிறகு தற்போது உள்ள மதுரையில் தொடங்கிய கடைச் சங்கம் ஆகும். இரண்டாம் சங்கத்தை நடத்தி, கபாடபுரம் அழியும் போது அங்கிருந்து பிழைத்து வந்த முடத்திருமாறனால் இது, தொடங்கப் பெற்றது.இச்சங்கம் முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதி ஈறாக 49 அரசர்களால் நடத்தப் பெற்றது.

1850 ஆண்டுகள் இச்சங்கம் நடைபெற்றது. இச்சங்கத்தில் சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர்க்கிழார், இளந்திருமாறன், மதுரை ஆசிரியர் நல்லந்துவனார், மருதன் இளநாகனார், நக்கீரனார் என 449 புலவர்கள் பாடினர். இதில் எழுதப்பட்ட நூல்கள் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை, பரிபாடல் போன்றவை ஆகும்.

முச்சங்கங்கள் பற்றிய மேற்கண்ட செய்திகளை இறையனார் களவியல் உரை என்ற கி.பி. 8ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல்தான் கூறுகின்றது. இந்நூல் கூறும்செய்திகள் முழுமையான நம்பிக்கைக்குரியனவா என்பதுஆராய்ச்சிக்குரியதாகும்.

இருப்பினும் சங்கம் என்ற ஓர் அமைப்பு,பாண்டியர்களால் நடத்தப் பெற்றமை குறித்துச் சங்க இலக்கியங்களில் சான்றில்லை என்றாலும், பிற்கால இலக்கியங்களிலும் நிறையச் சான்றுகள் கிடைக்கின்றன.
முச்சங்கங்களும் இருந்த கால அளவு, பாடிய புலவர்களின் எண்ணிக்கை, சங்கம் நடத்திய அரசர்கள் பற்றி இறையனார் களவியல் உரை கூறும் செய்திகள் முழுமையும் உண்மையாக இருக்க வாய்ப்பு இல்லை.
கி.மு.500 முதல் கி.பி.200 முடிய உள்ள காலமே சங்கம் நடைபெற்ற காலமாக இருக்க முடியும்.



# கவித் தொகுப்பு

## அசலைத்தாய்

அரும்பு மொட்டாகி
மொட்டு முகையாகி
முகை மலராகி
மலர் அலராகி
அலர் வீயாகி
வீ காயாகி
காய் பழமாகி
பழம் கனியாகி
கனி குயிலுக்கு உணவாகி
குயில் இசையாகி
இத்துனையும் ஆக
இதைக்காண எனது அசலைத்தாய்
ஆண்டுகளாய் காத்திருக்கிறாள்.

**-ர.சந்திரகாந்த்**

# தமிழ் களஞ்சியம்

| | | |
|---|---|---|
| PAINT |  | சாயம் |
| PAINT BRUSH |  | வர்ண தூரிகை |
| REMOTE |  | தொலையியக்கி |
| TELESCOPE |  | தொலைநோக்கி |
| MICROPHONE |  | ஒலிவாங்கி |





6374666300

tqizhagaram@gmail.com

இந்த இதழ் பற்றியதங்களின்
கருத்துக்களும் விமர்சனங்களும்
வரவேற்கப்படுகின்றன